
எதுமலை


காமாட்சியம்மன் – கருப்பண்ண சுவாமி

# தல புராணம்.



1221

வெளியீடு:
வழிவழி அறங்காவலர்
வீர. இளங்கோவன்,
காமாட்சியம்மன் - கருப்பண்ண சுவாமி திருக்கோயில்,
எதுமலை.



முகப்புத் தோற்றம்.

# எதுமலை

# காமாட்சியம்மன் – கருப்பண்ண சுவாமி

# தலபுராணம்.

இயற்றியவர்

புலவர் சொ. சிதம்பர அய்யர்
எதுமலை.

வெளியீடு:

வழிவழி அறங்காவலர்

வீர. இளங்கோவன்

காமாட்சியம்மை—கருப்பண்ண சுவாமி திருக்கோயில்,

எதுமலை.

முதற் பதிப்பு: ஜனவரி 1984

Kamatchi Ammai – Karuppanna Swami
Thalapuranam.

அச்சிட்டோர்: அன்பு மின் அச்சகம், நாமக்கல், சேலம் மாவட்டம்.

# திருமுன் படையல்.

இப்பூவுலகில் புனிதமான புண்ணியபூமி என்று உரிமை கொண்டாட ஏதாவது ஒரு நாடு இருக்குமானுல்.........

பூவுலக ஆன்மாக்கள் தம்வினைப்பயன்களைக் கழிக்க வேண்டிய ஒரு நாடு என ஒன்றிருக்குமானுல்.........

இறைவழியை நோக்கிச் செல்லும் ஒவ்வொர் ஆன்மாவும் நன் வீடாக வந்தடைய வேண்டிய நாடு என ஒன்று இருக்குமானுல்......

மனித இனம் அன்பின் சிகரத்தை, பரந்த உள்ளத்தின் உச்ச நிலையை, தூய்மையின் உயரத்தை, அமைதியின் எல்லையை அனைத்துக்கும் மேலாக ஆன்மீக உள்நோக்கின் சிகரத்தை எட்டியநாடு என்று ஒன்றிருக்குமானுல்.........

அதுதான் 'நம் நாடு'.

இதில் எள்ளளவுக்கும் ஐயமில்லை, அதனுல் தான் நம்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் இறைவன் உறையும் திருக்கோவில்களாகவே தென்படுகின்றன.

இந்நிலவுலகை மட்டுமின்றி அனைத்துக் கோள்களையும் இயக்கி வந்திடும் ஆற்றலாம் இறைவனை எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இறையை எந்த வடிவத்திலும், எந்த உருவத்திலும் கண்டு தெளியும் மனப்பான்மை மிக்கவராய் நம்மவர் ஆகிவிட்ட காரணமோ என்னவோ நம் இறைவனுக்கு இதுதான் உருவம் என்றில்லால், இதுதான் இடம் என்றில்லாமல் எவ்வுருவத்திலும், எவ்விடத்திலும் இறைத்தன்மையை நாம் காண்கிறோம். மனிதனின் கற்பனையில் வெளிப்பட்ட வடிவங்கள் எல்லாம் இறைவன் வடிவங்களாகி விட்டன! எல்லா இடங்களும் இறைவன் உறையும் கோவில்களாகி விட்டன!

மாட, மாளிகைகள் மிகுந்த மாநகரங்கள்! மண்குடில்கள் மலிந்த சிற்றூர்கள்! எல்லாமே 'இறை' யின் முன் சமம்' எங்கே உண்மை பக்தி ஊற்றெடுக்கிறதோ, அங்கே 'கடவுள்' கோவில் கொள்கிருன்!

நாட்டின் முதுகெலும்பு மட்டுமா கிராமம்? இறைவன் வாழும் இடமும் இறைவனை வாழ்விக்கும் இடமும் கிராமம்தான்!

இதற்கு எங்கள் 'எதுமலை' மட்டும் விதிவிலக்காக முடியுமா?

சோறுடைய சோழநாட்டின்கண் புலவர் நாவிரிய பாவிரிய காவிரித்துப் பாயும் காவிரியின் வடபால் ஏறத்தாழ இருபதுகல் தொலை வில் பழம்புகழோடு வரலாற்றுப் பெருமையும் உடைய ஊர் 'எதுமலை',

எதுமலையின் பெருமைக்கு முக்கிய காரணமாகத் திகழ்ந்து இங் கமைந்துள்ள அருள்மிகு காமாட்சி அம்மன் கருப்பண்ணசுவாமி ஆலயம் என்றால் மிகையன்று. இத்திருக்கோவில் 'பத்தோடு பதினொன்று அத்- தோடு இதொன்று' என்கிற வகையித் சாராமல் தனித்தன்மையும் சிறப்பும் உடைய பெருமை பெற்றது.

'எம்மதமும் சம்மதமே' என்பதைப் போலஇக்கோவிலில் சைவத்து ஏகாம்பரஈசன் காமாட்சி அம்மனுடன் குடிகொண்டிருக்க, வைணவத்துத் திருமால் கருப்பண்ணசுவாமியாகக் காட்சி தந்து கொண்டிருக்கிறார்! ஏழுக்கன்னியர் இடம் பெற்றுள்ள இக் கோவில் மதுரை வீரன், காத்த வாராயன், தேவராயர், விராட. சன்யாசி, ஆரியப்பூராசா ஆகியோரும் எவ்விதப் பேதமுமின்றி கோவில் கொண்டுள்ளனர்!

'எதுமலையான் துணையிருந்தால்

ஏதுமிலானும் எதற்கும் மலையான்' எனும் ஆன்றோர் வாக்கு இவண் உறையும் இறையின் அருட்சிறப்பை உறைக்கும்!

ஐந்து நூற்றாண்டுகளாய் அருளோடு புகழோடும் விளங்கிடும் இக்- கோவில் எம் மரபின் முன்னோர்களில் ஒருவரான 'ஆதிவீரம்ம ரெட்டி' காலம் முதல் இன்றையக் காலம் வரை மரபு வழியாகச் சீரும் சிறப் போடும் இயங்கி வருகிறது!

இக்கோவிலின் சிறப்பையும், வரலாற்றையும், இவண் உறையும் இறையின் அருட்செயல்களையும் பக்தர்கள் அனைவரும் தெளிவுறதெரிந்து கொள்ள வேண்டுமென்கிற ஆர்வத்துடனும் நல்லெண்ணத்துடனும் இந் நூலை உம் முன் தவழ விடுகிறோம்!

கோவில்குடிகள், பக்தர்கள் , இறையன்புச் செல்வர்கள் ஒத் துழைப்புடன் கோவில் திருப்பணி நடக்கும் இந்நேரத்தில், அறிஞர் ஆன்றோர் உதவியுடன் இறைபுகழ்பாடும் இந்நூலை, எம் இறையின் திரு முன் காணிக்கையாகப் படைக்கிறோம்!

இப்படையலைப் பெறுவோர் சுவைப்பதோடு நில்லாமல் ஆலயம் வந்து இறையின் அருளைப் பெறுவீர்! ஆலயம் புதிய பொலிவைப் பெற பொருளுதவியும் தருவீர்!

எதுமலையான் அருகிருக்க

எதற்கும்மலையார் எவரும்!

**வீர. இளங்கோவன்,**

மரபுவழி அறங்காவலர்.

எதுமலை

காமாட்சியம்மன் கருப்பண்ண சுவாமி துணை.

# 'முகவுரை'

ஆழிசூழுலகில் பலப்பல தலங்கள் பெருமையோடு விளங்குகின்றன அவைகளில் சில அடியார்களால், தூய்மையுடன் பாடப் பெற்றுள்ளன. இவைகளுள் மூர்த்திச் சிறப்பு, தீர்த்தச் சிறப்பு தலச்சிறப்பு என்கின்ற மூவகைச் சிறப்புகளும் உடையனசில; இருவகைச் சிறப்புகள் உடையன ஒருவகைச் சிறப்புடையன சில என்பதை அறிஞர் அறிவர்.

எதுமலை ஏகாம்பரேசர், காமாட்சியம்மன் கருப்பண்ண சுவாமிகள் எழுந்தருளியுள்ள இடமானதுமுச்சிறப்பும் உடையது. பண்டை நாள் பெருமை திகழ்வது. அருட்செயல்கள் உடையது.

கருப்பண்ணசுவாமி திருமாலுருவம் உடையச்சிறப்பை இத்தலமே பெற்றுள்ளது. மூர்த்திப் பெருமை, தீர்த்தப் பெருமை தலவரலாற்றுப் பெருமை ஆகிய முச்சிறப்பையும் உறைந்துள்ள இறையின் அருட்செயல்கள் பல!

கண் கண்ட சில செயல்களையும் அருட்பெருக்கையும் பல பக்தர்கள் பார்த்ததுவும் பயன்பெற்றதுவும் உண்டு. அடியேனும் அவர்களுள்ஒருவன் எனது முன்னோர் கூற்றினால் செவியுற்றன பல. பட்டறிந்து மொழிந்தன பல.

இத்தலம் தோன்றிட பக்திமான்களாய் மனித உருவில் வந்த சான்றோர்கள் பலராவர். இஃதை தல வரலாற்றில் காண்க! இத்தலம் சமரச மனப்பான்மையுடையது. சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம், குமாரம், தினகரம் என்கிற அகச்சமயம் அனைத்தும் மிளிர்வது.

அடியேனது முன்னோர் ''சொக்கலிங்கய்யர்'' என்பாரைத் தேடிக் கொணர்ந்து குடியமர்த்தி வாழச்செய்து காத்தவராய சுவாமி காதையை சந்தப்பாடல்கள் அமைத்து எளிமையான வகையில் அனைவரும் பொருளுணருமாறு இயற்றப்பட்ட பெருமை மிக்கது இத்தலம்.

ஒவ்வோர் ஆண்டும் மாசித் திங்கள் சிவன்ராத்திரியன்று இரவு நாடகவியலுடன் பாடப்பெற்று வருகின்றது. இப்போது அடியேனுல் எதுமலே தலபுராணம் விருத்தப்பாக்களால் அமைந்து வெளிவருகின்றது.

எங்கும் காணமுடியாதச் சிறப்பு இத்தலத்தின் கண் உண்டு ஏகாம்பர ஈசனும் காமாட்சியம்மனும் ஒரே சந்நதியில் இருப்பதும், கன்னிமார்கட்கும் தனிச்சந்நதியிருப்பதும், சாபம் அல்லது தண்டனே தீரும் பொருட்டு ஈண்டுவந்தகாத்தவராயர் காமாட்சியம்மனே நோக்கி கோவில் கொண்டிருப்பதும், சிறப்புக்களாகும். மேலும் காத்தவர் கழுவேற்றப் படுங்காலே காமாட்சி அம்மனே நோக்கி வணங்கி ஆசிபெற்று மங்கள முடியுடன் மீண்டும் இறங்குவதும் கண்ணேயும் கருத்தையும் கவரும் நிகழ்ச்சிகளாம்!

இத்தலத்தின் மூல கர்த்தா ஆதி வீரம்ம ரெட்டியார் என்கிற சான்ருேர் முதல் இன்றுள்ள இறையன்புச் செல்வர் வீர. இளங்கோவும் முறையே முன்னேர் போல் இத்தலத்திற்குரிய தொண்டும் ஆலயச் செப்பமும் அன்புடன் வழிபாடும் இயற்றுகின்ருர்.

ஆலயச் செப்பனிடல் நடக்கிறது! கருப்பண்ணதுரைக்கு ஈகின்ற பொருள் அருளப்பனுக்குதல் காண்பீர்!

இங்ஙனம்,

புலவர். **சொ. சிதம்பர அய்யர்**,

எதுமலே.

# அணிந்துரை.

(டாக்டர் ந. சுப்புரெட்டியார், சென்னை-40)

தமிழகத்தில் பக்தி இயக்கம் செழித்தோங்கிய காலத்தில் ஆழ்வார்களும், நாயன்மார்களும் அடியார் குழாத்துடன் ஊர் ஊராகச் சென்று ஆங்காங்கு எழுந்தருளியிருக்கும் இறைவன் மீது பாமாலை சூட்டி மகிழ்ந்தனர். இங்ஙனம் சைவச் சான்றோர்களாகிய அப்பர் சம்பந்தர் சுந்தரர் பாடிப் போற்றியுள்ள சைவத்திருப்பதிகள் 'பாடல் பெற்ற திருப்பதிகள்' என்றும், ஆழ்வார் பெருமக்கள் பாடிப் பரவியிள்ள திருப்பதிகள் 'மங்களாசாசனம் பெற்ற திருப்பதிகள்' என்றும் வழங்கிவருகின்றன.

பாடல் பெற்ற சைவத் திருப்பதிகளும் மங்களாசாசனம் பெற்ற வைணவத் திருப்பதிகளும் ஏற்றம் பெற்றதனால் அக்காலத்தில் பெரும் புகழுடன் திகழ்ந்த சோழ, பாண்டிய, பல்லவமன்னர்கள் வானளாவும் கோபுரங்கள் கொண்ட திருக்கோயில்கள் கட்டுவித்து திருப்பணிகள் செய்தனர். இதனுல் கோயில்கள் ஏற்றம் பெற்றுப் புகழுடன் திகழவே திருத்தலப் பயணிகளின் கூட்டம் பெருகலாயின. நாளடைவில் ஆட்சி புரிந்த அரசர்கள் புலவர் பெருமக்களைக் கொண்டு தலபுராணங்கள் இயற்றுவித்தனர். புராணங்களால் திருத்தலங்களின் புகழ் மேலும் ஏற்றம் பெற்றது. அடுத்து திருப்பதிகள் தோறும் விழாக்கள் ஏற்படுத்தப் பெற்றன. விழாக்களால் மக்கள்கூட்டம் மேலும் பெருகலாயிற்று.

இந்த முறையில் எதுமலையில் எழுந்துள்ள காமாட்சியம்மன்-கருப்பண்ண சுவாமி திருக்கோயிலும் தலபுராணம் பெறுகின்றது. ஏழுமலையில் எழுந்தருளிய வேங்கடகிருஷ்ணன் எழுமலையில்(எதுமலையில்)கருப்பண்ணனாக எழுந்தருளுகின்றான். எழுமலை காலப்போக்கில் 'எதுமலை' என்ற பெயராக மருவி வழங்குகின்றது. கருப்பண்ணனோடு சிவபிரானின் தேவி காமாட்சியம்மையும் வந்து திருக்கோயில் கொள்ளுகின்றாள், இவர்கள் இருவருக்கும் ஆண்டுதோறும் ஆடித்திங்களிலும், மாசித்திங்கள் சிவன்ராத்திரியன்றும் விழாக்கள் விமரிசையோடு நடைபெற்று வருகின்றன.

இத்திருக் கோயிலில் சைவமும் வைணவமும் இணைந்து திகழ்வது குறிப்பிடத்தக்கது. சமயகாழ்ப்பின்றி மக்கள் தத்தம் சமயத்தை மறந்து சமயம் கடந்த நிலையில் இறைவழிபாடு நடத்தி வருவது மிகவும் போற்றத்தக்கது. விழாக்கள் நடைபெறுங்கால் வழிபாட்டுக்குச் செல்பவர்கள் இவ்வுண்மையை நன்கு அறிவார்கள்.

இந்தத் திருக்கோயிலை வள்ளல் நல்லப்ப ரெட்டியாரின் பரம்பரை காத்து வருகின்றது. அந்தக் குடிவழியில் வந்தவர் வீரம்ம ரெட்டியார், அவர் காலத்தில் கோயிற்பணிகள், விழாக்கள் சிறப்புற நடைபெற்றன. வீரம்ம ரெட்டியாரின் திருக்குமாரர் இளங்கோவன், இவர் கோயிலுக்குத் திருப்பணி செய்து குடமுழுக்கு விழாசெய்யும் நிலையில் உள்ளார் இவர் இளைஞர்; செயல் திறம் மிக்க பண்பாளர். இவர் காலத்தில் இத்திருக்கோயிலின் புகழ் மிகவும் ஏற்றம் பெறுகின்றது, காமாட்சிமம்மன் - கருப்பண்ண சுவாமி திருவருளால் இவர் நீடுபுகழும் நிறைசெல்வமும் நீண்ட அருளும் பெற்று திருப்பணிகளும் விழாக்களும் நடந்தி வருவராக.

**ந. சுப்புரெட்டியார்**

*''வேங்கடம்''*
*அண்ணா நகர்*
*சென்னை - 600040*
*29-12-83*

# சிறப்புப் பாயிரம்.

துங்கமே வடிவான ஆழ்வார்கள் போற்றிடத்
தூயமா மறைகள் வாழ்த்தத்
தொன்முனிவர் யோகத்து நிட்டையிற் கண்டிடச்
சுகமருளும் வேங்க டத்துப்
பங்கயம் பூத்திட்ட கொண்டல் போல் ஒளிர்கின்ற
பராபரன் வேத நாதன்
பாத்திகழ் பசுபால கோத்திரந் தனில்வந்த
பண்பன்வீ ரம்ம ரெட்டி
பொங்குமுள் ளத்துற்ற மங்கலப் பத்தியாற்
பொலியும்எது மலையில் உற்ற
பொற்புறு புராணத்தை நாற்புலவர் வாழ்த்திடப்
பொருவில் சிதம்ப ரையர்
மங்கலம் நனியோங்க இன்பமொடு பாடினர்
மாண்பெய்த இனிதருளு வாய்
மதுமணத் திருதுளப! எதுமலை பதிவரத!
மகிழ்கருப் பணசாமி யே!


— கம்பராமன்



# மூர்க்க விநாயகர் துதி.


ஒரு கனி பெறுதற் காகமூ வுலகை
    உழன்றுசுற் றிடுவதேன் என்ன
அருமறை போற்றும் உமாமகேச் சுரனை
    அறிந்துமுக் கால்வலம் செய்து
கருதுதோ றினிக்கும் நற்கனி பெற்றுக்
    கனிவுடன் அன்பருக் கருள
தருமிசை முகில்வாழ் எதுமலை மூர்க்க
    விநாயகர் தாளிணைப் பணிவாம்.

மதியணி வேணி யண்ணல் மங்கையோ டமர்ந்து வைகும்
நதிதிகழ் சோலை வாலி நாப்பணும் விளையும் பூமி
இதமுடன் விளங்கும் மூதூர் எதுமலை நகரின் கீழ்பால்
கதிதரும் கம்பன் எம்மான் கழல்பணிந் தேத்து வோமே.



## காமாட்சியம்மை துதி.

கஞ்சிகா மாட்சிஏ காம்பரர் தம்பிமொடும்
வாஞ்சையார் சோதரன் மாலொடும் மாண்புடன்
தீஞ்சுவைக் கனிதரச் சீருடன் எதுமலே
நாஞ்சலிப் புருமலே நண்ணினுள் பணிமினே!



# கருப்பண்ண சுவாமி துதி.

திருப்பதி தன்னில் எழுமா மலைமேல்
　　செழுமுகில் எனப்பொலி பரமன்
இருப்பதற் கேற்ற புனிதநற் றானம்
　　எதுமலை யேஎன ஓர்ந்து
விருப்பொடு பண்ட குலப்பெருந் தலைவன்
　　வீரம ரெட்டியோ டெய்திக்
கருப்பண்ண சாமி எனப்பெயர் கொண்டு
　　காட்சிதந் தருள்கின்றான்; பணிவோம்.

# பரிவார தேவதைகள்.

ஆரிய மன்னர்; கன்னியர் எழுவர்;
அருந்தவ விராடசன் யாசி;
சீரியல் சான்ற காத்தவ ராயர்
திகழ்தவம் புரிதேவ ராயர்;
பாரினில் பணிவோர் இடரெலாம் தீர்க்கப்
பரிவார தேவதை யாகச்
சீருடன் பொழில்சூழ் எதுமலை மேவித்
திகழ்நல்லேந் திரன்பதம் பணிவாம்.

# புராணம்.

செந்தமிழ் நாட்டில் அன்று
திகழ்ந்தபோ ராட்டத் தாலே
சந்ததம் மாந்தர் உற்ற
சங்கடம் போக்க எண்ணி
நந்தலில் கிருஷ்ண தேவ
ராயரும் நாட்டைக் காக்க
விந்தையார் குன்றில் மேவும்
வீரரைப் படையாய்க் கொண்டார்.

கோதையின் காதை பாடும்
கோதிலாக் கிட்ண ராயர்
சீதையில் கொழுந னைப்போல்
செகமெலாம் காக்க வேண்டி
வாதையில் லாமற் போர்செய்
வன்மையார் வீரம் தம்மை
மாதயை யுடன்தென் னாட்டை
மாபுறக் காப்பீர் என்றார்.

கம்பள நாய்க்கர், போரில்
களிப்புக்கொள் பலிஜர், தோக்கர்,
நம்புதற் குரிய கொண்டா
ரெட்டிகள் நயந்து வந்த
உம்பர்கள் போற்றும் கோவில்
உயர்ந்த பண்பாடு முற்றும்
வம்பின்றிக் காத்தார்; சைவம்
வைணவம் தழைத்த அம்மா!

பண்டகுலத் தவரென்றும் பாரெல்லாம் காக்கின்ற
கொண்டகுலத் தவரென்றும் குலையத்தோர் புகழ்வீரர்
தண்டமிழைக் காத்தார்கள்; தமிழ்மொழியைக் காத்தார்கள்
மண்டலத்தை காத்தார்கள்; மண்ணுமுழுது வாழ்ந்தார்கள்.

பங்கமிலாத் துரையூரில் பாங்குடனே அரசுபுரி
துங்குமுறு பாளையத்தார் துரையாக வீற்றிருக்க
அங்கவர்க்கு படைவீர ராய்வந்தார்; ஊரிலுள்ளார்
மங்கலமாய் வரவேற்ருர்; மாண்புடனே வாழ்ந்தார்கள்.

பண்டகுலப் பண்பாளர்; பார்போற்றும் சீராளன்;
அண்டினவர் தமைப்புரக்கும் அருள்பழுத்த கொடையாளன்
தண்டமிழில் சுவையறிவான்; தன்தெலுங்கை மறவாதான்
என்டிசையும் உவந்தேத்தும் எதுமலேயில் வாழ்அன்பன்;

வேறு

ஈண்டுசீர் விண்ணேர் போற்ற இறைவன்வாழ் வேங்க டத்தை
ஆண்டுதோ றெய்தி அன்னன் அன்பொடு போற்றி மீள்வான்
நீண்டவன் அன்பன் உற்ற நெடுந்துயர் போக்க எண்ணிக்
காண்டகு கல்லில் மேவிக் காளிகோ புரப்பால் உற்ருன்.

ஆலமா மரமோர் வித்தில் அடக்கியே இருத்தல் போலப்
பாலமார் விழியன் பஞ்சாட் சரத்தினுள் பதிதல் போல
தாலமார் அறங்கள் எல்லாம் சத்தியத் தடங்கல் போல
காலமும் கணக்கும் நீத்தோன் கல்லினுள் ஒடுங்கி வாழ்ந்தான்

அன்பன் வீரம்ம ரெட்டி யவ்வாண்டு வேங்க டத்தைத்
தன்பொதி மாடோடேவல் தாங்கிடும் சுற்றம் சூழச்
சென்றனர்; சின்னுள் ஆங்கே திருமாலே தினமும் போற்றி
நின்றனன் தன்னூர் ஏக நினைத்தனன் அருளும் கொண்டே.

கொண்டனன் காளிங் நாமக் கோபுரத் தருகோர் கல்லைப்
பண்டங்கள் சம தாகப் பக்கத்தோர் பொதியின் மீதில்
எண்டிசை போற்ற வைத்தான்; எதுமலை ஈச்சங் காட்டில்
கண்டிலன் எறிந்தான் ஆங்கே: கடந்தன சிறிது நாளே

நாளினில் தளிகை பூசை நடந்தது திருமா லுக்கே
காளிகோ புரத்துக் கல்வாழ் கருப்பண்ணன் அருவ மாக
ஆளின்மேல் உதய மானான்; அறிவித்த படியே அங்குர்;
கோளரி சயனக் கோலங் கொண்டதோர் உருவம் கண்டார்.

உருவினைக் கண்ட போதே உத்தமன் வழிபா டாற்றிக்
கருமுகில் வண்ணன் இங்கே கருப்பண்ணனாக வந்தார்;
கருவரை யமைத்துக் கச்சிக் காமாட்சிக் காத்தார் பந்தி
ஒருதிரு மரபைக் கொண்டே யுயர்கோயில் கட்டினாரே.

நானெனும் தீமையில்லான் நவந்திகழ் மனத்தால் தூய
வானவன் பெற்ற மைந்தன் வள்ளல்நல் லப்ப ரெட்டி
ஈனமில் குணத்தான்; தந்தை எழும்பிய கோவில் சுற்றி
ஊனமில் லாத டைத்தான்; ஒருகுளம் தொட்டான் அன்றே.

அன்றவன் ஈன்ற காளை அமைந்தநா ராய ணப்பேர்
தன்றிரு மைந்தன் வீர மன்திருத் தவத்தால் மிக்கோன்;
நன்றியில் வழுவா வீரன் நாற்புரம் மதில்எ டுத்தான்;
ஒன்றுமண் டபத்தைச் செய்தான் உயர்ந்தகோ புரத்தி னோடே.

ஓடொடு பொன்னும் ஒக்கும் எனவுளம் கொண்ட மேலோன்
நாடெல்லாம் வழக்குத் தீர்க்கும் நாயகன் நாட்டார் போற்றக்
காடெல்லாம் கிள்ளை வாழ்த்தும் காவலன் கற்றூர் தம்மை
நாடெல்லாம் துருவிக் கண்டோர் நாவலர் அழைத்து வந்தான்.

வந்தவர் வீர சைவர்; வசவதே வர்க்கு லத்து
அந்தணர்; சொக்க லிங்க ஐயராம் தமிழ்ப்பா வாணர்
பந்தியான் காத்தார் காதை பண்புடன் பாடச் சொல்லி
அந்தநற் புலமைச் செல்வர்க் கரும்பெரும் பரிச ளித்தார்.

அளியுடன் பரிசு நல்கி ஆதர வெல்லாம் தந்து
களியுற வாழச் செய்த கருணைவீ ரம்ம ரெட்டி
எளியவர் தம்மைக் காக்கும் ஈகையான் அவன்பின் பல்லோர்
ஒளிதிகழ் மரபில் தோன்றி யோங்கியே வாழ்ந்துள்ளாரால்

வந்தவர் தம்மில் மூன்றும் வள்ளல்வீ ரம்ம ரெட்டி
தந்ததம் கருப்பண் ணர்க்குத் தக்கதோர் விழாவெ டுக்கப்
புந்தியின் உறுதி கொண்டே பொருத்தமாய் வாக னங்கள்
சிந்தனை படியே செய்து திருவுலாக் காட்சி கண்டான்.

கண்டனன் ஆண்சேய் இன்றிக் கன்னியர் இருப்ப துன்னி
பண்டைநாள் சுற்றச் சார்பும் பண்புள்ள கிருட்ண ரெட்டி
கொண்ட நன்மகள் கொடுத்துக் குடும்பசம்பத்த ளித்தாள்
தொண்டனும் அன்னன் தெய்வத் தொண்டினைச் செய்தான் நன்றே

செய்தனன்; அவர்க்கி ரண்டு செம்மல் வீரம்ம ரெட்டி
மெய்திகழ் இராம லிங்க ரெட்டியும் மேலோர் போலச்
செய்தனர்; இருவர் எல்லாத் தெவத்தொண் டினைப்பு ரிந்தார்
தெய்வத்தை நம்பும் மூத்தான் சேய்வீர இளங்கோ வாமே.

ஆம்என வரலா றேதும் ஆதிவீ ரம்ம ரெட்டி
தாமெனத் தொடர்பாய் இந்நாள் தகுதியாய் இளங்கோ தானும்
ஏமமாய்ப் போற்று கின்றார்; இம்மர பினுலு தித்தார்.
கோமகன் கருப்பை யாவும் குடும்பத்தைக் காக்கின்றாரே.

கருப்ண்ணன், நல்லுசாமி, களரப்பன், நல்லான், முத்துக்
கருப்பண்ணன், வீரன், நல்லேந் திரன், எதுமலையான், மாயன்
கருப்பையா நல்லப் பன்சீர்க் காளிகோ புரத்தான் என்றே
திருப் பெயர் பனிரென் டாலே திருவடி பணிந்திட் டாரே.

மழுவலான் தேவி யான மங்கைக்காக மாட்சி யோடும்
முழுவலி படைத்த தேவன் முகில்வண்ணன் அன்பி னலே
எழுமலை தன்னில் நின்றும் இப்பதி வந்தான் இவ்வூர்
எழுமலை என்ற சொல்லே எதுமலை யாயிற் றன்றே.

பூமியில் மாரி பெய்க! பொருளோடு விளைக! பூமி
காமிய காரி யங்கள் கட்டடம் உயர்ந்து ஓங்க
சேமமே மல்க! எல்லாம் செப்பினேன் செழித்து வாழ்க!
காமாட்சி ஏகம் பன்தன் கருணையால் உலகம் வாழ்க!

பல்வளம் சிறந்தது வாழ்க! பாடினேன் நெடிது வாழ்க!
கல்வியும் கேள்வி வாழ்க! கற்புளார் பெருகி வாழ்க!
இல்வாழ்வோர் இருக்கை வாழ்க! இறை ஞானம் இனிதுவாழ்க!
நல்லப்ப னருளி னலே நாடெல்லாம் செழித்து வாழ்க!

சீரெது மலையில் வாழும் சிவநெறி வீர சைவன்
பேரது சொக்க லிங்கர் பெருஞ்சுதன் சிதம்ப ரையர்
காரெனு மேனி மாவோன் கருப்பண்ணன் ஆன காதை
தேரவே புராணம் தன்னைச் செப்பினர் தமிழ்ப்பா லாலே.

ஆக்கியோன்

**சொ. சிதம்பரம்**

எதுமலை

# பூசாரியார் வரலாறும் வழிமுறையும்.

ஆதி காலத்தில் எதுமலையில் சீரோடும் சிறப்போடும் புகழோங்க வாழ்ந்து காலப்போக்கில் 'ஆய்குடி' எனும்ஊருக்குக் குடியேறி அங்கேயே வாழ்வு நடத்திடும் வேளாளர் இனத்தின் ஒரு பிரிவான 'எதுமலையான், கோத்திரத்தார் இக்கோவிலின் பூசைகளைத் தொடர்ந்து செய்துவரும் பூசாரியராய் விளங்குகின்றனர்.

இப்பிரிவினரில் இருவர்அருள்வாக்கு மூலம்தேர்ந்து எடுக்கப்பட்டு தம் தெய்வப் பணியை வாழ்நாள் முழுதும் தொடர்ந்து செய்து வருகின்றனர். இறை ஊழியத்திற்கு மறுபயனாய் ஊதியத்தை எதிர்பாராமல் கோவிலில் தரப்படும். மரியாதையைப் பெரிதெனக் கருதிதம் பணியை ஆற்றி வருகின்றனர்.

தற்போதுகோவிலின் பூசாரிகளாக இருப்பவர்கள் திரு. வீ. வடிவேலு பிள்ளை திரு. வி. கருப்பையா பிள்ளை ஆகியோர் ஆவர்.

**குறிப்பு**

**முகப்பு விமானம் — வரகூர் கிராமத்தார்**

**பின் அட்டை விமானம் — K. பெரியசாமி பிள்ளை (~~ஜவுளி~~ [தவமணி] ஸ்டோர்)**

**மற்ற திருப்பணி அன்பளிப்பாளர் விபரம்**

**கும்பாபிசேக மலரில் வெளியாகும்.**

அருள்மிகு

# காமாட்சி அம்மன், கருப்பண்ண சுவாமி ஆலயம்

எதுமலை

## விழாக் காலங்கள்

**சாதாரண பூசை**

பிரதி வெள்ளிக் கிழமை.

**சிறப்பு பூசை நாட்கள்:**

1. சித்திரை பௌர்ணமி.
2. ஆடி பதினெட்டு.
3. ஆடி இறுதி வெள்ளி.
4. கார்த்திகை தீபம்.
5. தைப் பிறப்பு.
6. மகாசிவராத்திரி.

**திருவிழாக்கள்**

**ஆடிபூசை**

ஆடித்திங்கள் இறுதி வெள்ளிக்கிழமை இரவு ஆடிப்பூசை நடைபெறும். அபிசேக ஆராதனை, அலங்கார ஆராதனை, பொங்கல் பூசை என இரவு முழுதும் பூசைகள் நிகழும் .

காலையில் உற்சவமூர்த்திகள் அலங்காரமாய் கோவிலில் இருந்து ஊர் வந்திறங்குவார்,

**மகாசிவராத்திரி**

மாசித் திங்கள் சிவராத்திரியன்று இவ்விழா நடைபெறும். சிவராத்திரி இரவு கோவிலில் விடிய வி டி ய நடக்கும் பூசைகளுடன் காத்தவராயன் கதையும், கழுவேற்றமும் சிறப்பாக நடைபெறும்.

மறுநாள் சுவாமி ஊர் வந்ததும் இரவில் வீதி உலா!

அம்மனும், கன்னிமாரும் கரகங்களில் முன் செல்ல ஏகாம்பரஈசன் தன் தேவியுடன் 'காளை' மீதேறி துள்ளி தொடர கருப்பண்ணனே 'யானை'யில் அசைந்து பின்செல்ல, ஏனைய தேவர்கள் படத்தேரில் பவனி வர வீதியுலா எதுமலையில் சிறப்பாய் நடந்தேறும்.

